உடனடியாக ஏலம் போட்டுக் கொடுத்து கேரளாவுக்கு கடத்தப்படுவதை தடுத்து......

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்வியாகக் கேட்கவும்.

திரு. இரா. அப்பு நடேசன்: மணலை கேரளா மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதால்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே மணல் தட்டுப்பாடு, இப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்படுகிறது. ஆகையால், இந்த மணலை ஏலம் போட்டுக் கொடுப்பதாக இருந்தால், கீரிப்பாறையிலும், காளிகேசத்திலும், பேச்சிப்பாறையிலும் இருக்கின்ற மணலை ஏலம் போட்டுக் கொடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மணல் தட்டுப்பாட்டை நிறுத்தி, கீரிப்பாறை, பேச்சிப்பாறை, காளிகேசத்தில் உள்ள மணலை ஏலம் போட்டுக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற பேச்சிப்பாறை அணை பொதுப்பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால் பொதுப்பணித் துறையினுடைய அனுமதியோடு உரிய முறையில் ஏலம் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 352. திரு. தி. சாத்தையா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

352—

நெசவாளர் பாதிப்பைத் தடுத்தல்

***35392—**திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்த துணிகள் தேங்கி கிடப்பதாலும், கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு அரசிடமிருந்து தொகை வராததாலும் நெசவாளர் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 ஏப்ரல் 19]

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அதே போல் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நேரிடையாகவும் வெளிச்சந்தை மற்றும் முகவர் வாயிலாகவும் விற்பனை செய்து வருகின்றன.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் பெருமக்களின் வாழ்வில் புத்துணர்வு பெற்று நல்லாட்சி, நல்ல ஒளிமயமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கும் நமது புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் எனது இராஜபாளையம் தொகுதிக்குட்பட்ட சக்கரைப்பட்டி இந்தியாவிலேயே கடந்த 11 வருடங்களாக இந்த டெக்ஸ்டைல் எக்ஸ்போர்ட் அவார்டு பெற்றிருக்கிறது. சக்கரைப்பட்டி கிராமத்தில்தான் நெசவாளர் பெருமக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். இங்கு கிட்டத்தட்ட ஆறு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இப்பகுதியிலுள்ள மக்களில் பெரும்பாலோர் நெசவுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசு கொள்முதல் செய்யும்போது அதற்கான பணம் அவர்களுக்கு உடனடியாக கிடைக்காததால் அவர்களுக்கு கூலி கொடுக்க முடியாமல், சில சமயங்களில் கொள்முதல் செய்து விட்டு ஆறு மாதமோ, சில சமயங்களில் 9 மாதமோ ஆகிவிடுகிறது. அந்த பணம் உடனடியாக பட்டுவாடா செய்வதற்கு அல்லது கொள்முதல் செய்தவுடன் அந்த பேமெண்ட் செய்வதற்கு டைம் பவுண்டு புரோகிராம் திட்டத்தை அமைத்து அந்த நெசவாள மக்களுக்கு கொடுக்க வேண்டிய கூலியை உடனே பட்டுவாடா செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்வது என்பது அரசு செய்வதல்ல. கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய தலைமைச் சங்கம். அந்த நெசவாளர் சங்கங்களிடமிருந்து பொருள்களை வாங்கி கோ-ஆப்டெக்ஸ் விற்று அவர்களுக்கு பணம் தருகிறது. அந்த வகையிலே 31-3-1995 வரை ஏறக்குறைய 210.43 இலட்சம் மீட்டர் துணிகள் தேங்கி இருக்கின்றது. இது 2½ மாத அளவிற்குள்ளதாகும், 2½ மாதத்திலே உற்பத்தியான துணியாகும். இந்தத் துணிகளை நான்கு மாதம் வரை கோ-ஆப்டெக்ஸ் எடுத்துக் கொள்ளலாம். அடுத்து, இந்தச் சங்கங்களுக்குத் தர வேண்டிய பாக்கி ஏறக்குறைய எல்லா சங்கங்களுக்கும், தமிழ்நாட்டில் ஏறக்குறைய 1,500 சங்கங்களுக்கு மேலே இருக்கிறது. அந்த சங்கங்களில், சில சங்கங்களுக்கு தர வேண்டிய பாக்கி 43 கோடி ரூபாய் அளவிலே இருக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் ஒரு ஆண்டுக்கு 500 கோடி அளவிலே டர்ன்-ஓவர் செய்கிறது. அதிலே 43 கோடி என்பது ஒரு சிறிய

தொகை. ஆனாலும்கூட நெசவாளர் சங்கங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு 6 மாதங்களுக்குள் அந்த நெசவாளர் சங்கங்களுக்கு இந்த துணிகளுடைய பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. 6 மாதத்திற்கு மேலே எங்கேயும் வைத்துக் கொள்வது இல்லை. அதைப்போல அண்மையிலே, மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் தள்ளுபடி மான்யம் வழங்கியதின் மூலமாக ஏற்கனவே 1994-ல் ரூ.1334 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. 1995-ல் ரூ.1345 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக அரசிடமிருந்து பெற வேண்டிய நிதியினை அவர்கள் முழுமையாக பெற்றது மட்டுமல்லாமல் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான போதிய மூலதனத்தையும் பெற்றிருக்கிறார்கள். சில இடங்களில் துணிகள் தேங்கியிருக்கிறது. கோ-ஆப்டெக்ஸிலே விற்பனையாகாமல் அப்படியே இருக்கிறது என்று சொன்னால் பொது மக்கள் விரும்புகின்ற துணிகளை நாம் உற்பத்தி செய்து தர வேண்டும். ஆகவேதான், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னால் கம்ப்யூட்டர் முறையிலே புதிய டிசைன்களை உருவாக்க வேண்டுமென்று இந்த துறைக்கு உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையிலே அப்படிப்பட்ட டிசைன்களை உருவாக்கி, இந்த டிசைன்களிலேதான் சேலைகளும், மற்றவைகளும் உருவாக்கப்பட வேண்டுமென்று நெசவாளர் சங்கங்களுக்கு இப்போது உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக வருங்காலத்தில் கொஞ்சம்கூடத் துணிகள் தேங்காமல் விற்பனையாவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்து அதற்குரிய பணத்தை ஆறுமாத காலத்திற்குள் பட்டுவாடா செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மிகவும் லாங் பீரியட் ஆகும். ஆகவே, கொள்முதல் செய்த ஒரு மாதத்திற்குள் பணம் கிடைக்கும்படி செய்தால் நன்றாக இருக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் போது எந்தத் துணிகள் வேகமாக விற்பனை ஆகிறதோ அந்தத் துணிகளுக்கான பணத்தைப் பட்டுவாடா செய்கிறபோது 10 நாட்களுக்குள் கூட பட்டுவாடா செய்து விடுகிறார்கள். ஆனால், சில துணிகள் விற்கவே இல்லை என்றால், கோ-ஆப்டெக்ஸ் அந்தத் துணிகளை வாங்கிக் கொண்டு, அவைகள் விற்காமல் இருந்தாலும், அதற்கான பணமும் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, நல்ல விற்பனையாகக் கூடிய துணிகளுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா